www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024 | தேர்வு எண் |
|---|---|
| காலம் : 1-30 மணி XI - தமிழ் | மதிப்பெண் : 50 |

## பகுதி -1

*குறிப்பு : 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.* **(8x1=8)**

*2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.*

1. **கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.**

| | | |
|---|---|---|
| அ) விரியன் | - | 1) தண்டை |
| ஆ) திருகுமுருகு | - | 2) காலாழி |
| இ) நாங்கூழ்ப்புழு | - | 3) சிலம்பு |
| ஈ) குண்டலப்பூச்சி | - | 4) பாடகம் |

அ) 3 4 2 1
ஆ) 3 1 4 2
இ) 4 3 2 1
ஈ) 4 1 3 2

2. **கூற்று 1:** தஞ்சைப் பெரியகோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார்
**கூற்று 2:** அங்குள்ள சோழர்கால‌த்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி

3. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று
அ) சாழல் ஆ) சிற்றில்
இ) சிறுதேர் ஈ) சிறுபறை

4. தன்முதல் படத்திற்கே தேசிய விருதுபெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற சிறப்பினைப் பெற்றவர் யார்?
அ) ஏ.ஆர்.இரகுமான் ஆ) இளையராஜா
இ) கங்கை அமரன் ஈ) சிற்பி

5. ‘ஜனப்பிரளயம்’ என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை
இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

6. ‘அழகும் அறிவும் இளைமையும் வாய்ந்தவன்’ - யார் யாரிடம் கூறியது?
அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

7. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க
அ) காவலாளி ஆ) மேலாளர்
இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

8. ‘Horticulture’ - என்பதன் தமிழ்ச்சொல் எது?
அ) தோட்டக்கலை ஆ) இயற்கை வேளாண்மை
இ) வேதி உரங்கள் ஈ) வேர்முடிச்சுகள்

## பகுதி -2

***II. எவையேனும் ஐந்தனுக்கு குறுகிய விடையளிக்க.*** **(5x2=10)**

9. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?
10. அயர்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
11. கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
13. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?
14. செந்துறைப் பாடாண்பாட்டு - துறை விளக்கம் தருக.
15. உலக அளவில் கணிதச் சூத்திரங்களையும், வேதியியல் குறியீடுகளையும் தமிழில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று வா.செ.குழந்தைசாமி கூறுகிறார்?

## பகுதி -3

***III. எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.*** ***(2x4=8)***

16. ஃபிரெஸ்கோ ஓவியங்கள் கற்றளிக்கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
17. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றால குறவஞ்சி கூறுவன யாவை?
18. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
19. 'சேரநாடு செல்வவளம் மிக்கது' என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

## பகுதி -4

***IV. பின்வரும் நெடுவினாவிற்கு விடை தருக. (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்)*** ***(1x6=6)***

20. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.
21. பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

## பகுதி -5

***V. கீழ்க்காணும் மொழித்திறன் பயிற்சிகளுக்கு விடை தருக.***

***22. பகுபத உறுப்பிலக்கணம் தருக. (ஏதேனும் ஒன்று மட்டும்)*** ***(1x2=2)***
1) எழுந்த 2) ஈட்டினார்

***23. இலக்கணக் குறிப்புத் தருக. (ஏதேனும் ஒன்று மட்டும்)*** ***(1x2=2)***
1) அலைகடல் 2) அழியாச் செல்வம்

***24. தொடர் மாற்றம் செய்க. (ஏதேனும் ஒன்று மட்டும்)*** ***(1x2=2)***
1) தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப் பாணியாகும். ***(வினாத்தொடர் ஆக்குக)***
2) என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை ***(செய்தித்தொடர் ஆக்குக)***

***25. மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (ஏதேனும் 1 மட்டும்)*** ***(1x2=2)***
1) எதிர்நீச்சல் 2) கானல்நீர்

***26. பின்வரும் கலைச்சொல்லிற்கு விடை தருக.*** ***(2x1=2)***
1) Disaster 2) Debate

***27. விடுபட்ட இடத்தில் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.*** ***(4x½=2)***
1) எழுத்து, ________ சீர், தளை, ________ தொடை
2) சேரன்-வில், சோழன் ________, ________ - மீன்

***28. ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு, விடுகதைக்குரிய விடை எழுது.*** ***(2x1=2)***
1) அறிவைத் தேடி போகுமிடம் உலகம் அறிய உதவுமிடம் (அகம்) - ________
2) வந்தால் மகிழ்ச்சி இது, உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) - ________

## பகுதி -6

***VI. மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.*** ***(1x4=4)***

29. "சிற்றூரும் வரப்பெடுத்த"........ - எனத்தொடங்கும் 'புரட்சிக்கவி' பாடலை அடிபிறழாமல் எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com